1974 மார்ச் 15]

திரு. கே. எ. வகாப்: இந்தக் கருத்தரங்கினால் விவசாயிகளுக்கு பலன் ஏற்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். சில தவறான முடிவுகளினால் விவசாயிகள் கடன் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டார்களா? அவர்களுக்கு ஏதாவது நல்ல ஆலோசனை கூறப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீரை வெளிக்கொண்டுவருகிற முயற்சியை மேற்கொள்கிற துறை வேறு. அறிவியல் கருத்துக்கள், தொழிலியல் கருத்துக்கள் பெறுவது வேறு. தொழில் நுட்பக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டு நல்ல முறைகளை எப்படிக் கையாளலாம், எப்படி அவற்றைக் கையாண்டு வெற்றி பெறுகிறார்கள் என்பதைப்பற்றி ஆராய நடத்தப்பட்ட கருத்தரங்கு இது. இக்கருத்தரங்கு, தமிழகத்திலே தீவிரமாகவும், மிக நல்லமுறையிலேயும் திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுவனவாக அமையும். அறிக்கைகள், மேற்கொண்டிருக்கிற நடைமுறைகள் பற்றி, அதற்சென்று தனியாக இருக்கிற துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களுக்குத் தனிக்கேள்வி போடவும்.

"தமிழ் அரசு"

*435 வினா—திரு. தி.சி. சு. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "தமிழ் அரசு" மாதம் ஒன்றுக்கு எத்தனை பிரதிகள் அச்சடிக்கப் படுகிறது?

(இ) அப்பிரதிகளில் எத்தனை இலவசமாக வழங்கப்படுகிறது?

(உ) அப்பத்திரிகை பிரசுரம் செய்வதில் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு: என். வி. நடராசன் (அ)—(உ) மாதம் ஒன்றுக்கு தமிழ் 38,500 பிரதிகளும், ஆங்கிலம் 3,000 பிரதிகளும் அச்சடிக்கப்படுகிறது.

இலவசப்பட்டியல் மூலம் சுமார் 1,150 இதழ்கள் இலவசமாக வழங்கப் படுகிறது.

அரசு நடத்தும் ஏடு லாபநஷ்டத்தைக் கருதி நடத்தப்படும் ஏடு அல்ல. அரசின் பல சாதனைகளைப் பற்றிய கட்டுரைகள், கவிதை, வெண்பாப் போட்டி போன்ற பல செய்திகளைத் திரட்டி குறைந்த விலையில் எல்லாத்தரப்பட்ட மக்களும் படித்துப் பயன்பெறும் நோக்கத்தோடு நடத்தப்படுவதாகும். இதற்கு முன் அரசால் நடத்தப்பட்ட மேழிச் செல்வம், சீரணி, பாக்கியலட்சுமி போன்ற இதழ்கள் குறைந்த விலையில்

விற்கப்பட்டன. மேற்கண்ட ஏடுகள் லாப நஷ்டத்தைக் கருதி வெளியிடப் படவில்லை. உதாரணமாக ஆரோக்கியமார்க்கம் ஹெல்த் எஜுகேஷன் என்ற இதழ்கள் அரசுச் செலவில் அச்சடிக்கப்பட்டு இலவசமாகவே வெளியிடப்பட்டுள்ளன. தற்போது மக்கள் நல்வாழ்வுத்துறையில் வெளியிடும் "குடும்ப நல செய்திக் கதிர்" என்னும் இதழ் மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

முற்பகல் 9-30

திரு. எம். சுரேந்திரன்: சார், தமிழ் அரசு 38 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அச்சிடப்படுவதின் மூலமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு வருவாய் வருகிறது? அதை விநியோகிப்பதின் மூலமாக எவ்வளவு வருவாய் வருகிறது? எவ்வளவு துண்டு விழுகிறது? இந்த தமிழ் அரசிலே பல பேர்கள் கட்டுரைகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் கட்டுரை எழுதி அனுப்ப அனுமதிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: தலைவர் அவர்களே, சந்தாதார்கள் மூலமாக 1—7—1970 முதல் 16—9—1973 வரையில் விற்பனையானது சுமார் 6 லட்சத்து 88 ஆயிரத்து 378 ரூபாய். ஏஜன்டுகள் மூலமாக தமிழ், ஆங்கில இதழ்கள் விற்பனை செய்தது சுமார் 4 லட்சத்து 36 ஆயிரத்து 679 ரூபாய். இதிலே தனியார் நிறுவனங்களாலும், அரசு நிறுவனங்களாலும் விளம்பரங்கள் செய்யப்பட்டதன் மூலம் சுமார் 5 லட்சத்து 19 ஆயிரத்து 950 ரூபாய் கிடைத்தது. இது வரவு குறித்து தெரிவிக்கும்படியான குறிப்பாகும். இதை சட்டப் பேரவை, மேலவை, பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்ட துறையாளர்கள், துறைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் ஆகியவர்களுக்கு இலவசமாக வழங்குகிறோம்.

திரு. ந. சோமசுந்தரம்: லாப நஷ்டம் கருதி இது நடத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், மேலும் அரசினுடைய சாதனைகளை மக்கள் அறியத்தக்கவகையிலே ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கும் இது இலவசமாக வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எ.ஆர். சுப்பையா: சபாநாயகர் அவர்களே, மேழிச் செல்வம் என்று முன்னாலே வந்தது விவசாயிகளுக்கு மிகவும் பயன்படக்கூடியதாக இருந்தது. அதில் இருக்கக்கூடியவையெல்லாம் இதில் வரும் என்பதால் இதனை வரவேற்றுக் கொண்டிருந்தோம். மேழிச் செல்வத்திலே அதிகமாக விவரங்கள் வந்தன. இதிலே இப்பொழுது வருவதில்லை. ஆகவே விவசாயப் பகுதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

1974 மார்ச 15]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ் அரசிலே முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே ஆற்றிய உரைகள் எல்லாம் அச்சிடப்பட்டு பிரசுரம் செய்யப்படுகின்றன. அந்த உரைகள் எல்லாம் ஏற்கனவே சட்டமன்ற நடவடிக்கை புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வருகின்றன. ஆக, தமிழ் அரசிலும் அதை பிரசுரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? எதிர்க்கட்சித் தலைவர்களுடைய உரைகளையும் அதிலே பிரசுரிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சியினர் இந்த அவையிலே எழுப்புகின்ற சந்தேகங்கள், கோருகின்ற விளக்கங்கள் இவைகளுக்குப் பதிலாக முதலமைச்சர் உரை அமைந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்கட்சியினர் உரையும் அதிலே கலந்திருக்கிறது. ஆகவே தனியாக அச்சிடப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ் அரசு பிரதிகள் தனியார்கள் மூலம் விற்பனைக்குக் கொடுக்கப்படுகின்றனவா? அதன்மூலம் எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன்: நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். தனியார் துறையிடம் தரப்படுகிறது. அதன் மூலமாகக் கிடைத்த ரூபாய் சுமார் 22 லட்சத்து 60 ஆயிரத்து 475 ரூபாய் 20 காசுகள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Journal 'Tamil Arasu' is attractive and its get-up is good and it contains also very good articles and people are able to understand the Government's schemes. Since there are a large number of Telugu speaking people in this State, may I know whether the Government will be pleased to publish it in Telugu or include Telugu articles in the Tamil Journal?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை ஆராயலாம்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*436 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் 3-வது வார்டு அரிசனங்களுக்கு, மடப்புறம் உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ரூபாய் 4,590·70.